# “பெரியாரின் நெறிவாழும் பேரனே வருக! பெருவெற்றி பெறப்போகும் தீரனே வருக!”

ஏழாவது முறையும்
எழிலாட்சி நடத்தி
இணையற்ற சாதனைகள்
இயற்றப் போகும் நம்
ஏராாந்த முதலமைச்சர்
ஏழுநாள் பயணத்தை
இனிதே முடித்து
எட்டாத உயரங்கள்
எட்டிப் பிடித்து
ஏராள முதலீடு
ஏற்றுக் களித்து

‘இவரன்றோ தமிழ்நாட்டின்
இமயமெனப்’ பொலிந்து
இன்று திரும்பினார்
இங்கிலாந்தில் இருந்து!

ஈரோடு காஞ்சி
இசைமேவும் திருவாரூர்
பல்கலைக் கழகங்களில்
பாடு கிடந்து
பாடங்கள் படித்துப்
பகுத்தறிவுப் பட்டங்கள்
பலவும் பெற்ற
பண்பாட்டுப் பெட்டகம்
மாண்புமிகு முதல்வர் அவர்கள்
கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்
மற்றும்
ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின்
அறிவாய்வு அரங்கங்களை
அலங்கரித்து விட்டு,

**‘ஆகாயச் சூரியன்**
**அனல்மாறிக் குளிரடைந்து**
**அழகிய புன்னகையை**
**அணிந்த கோலத்தில்**
**இறங்கி வந்தால்**
**எவ்வண்ணம் இருக்குமோ’**
**அவ்வண்ணம் வந்துற்றார்**
**இன்று!**

**முதலீடுகளை ஈர்க்க**
**முதல்வராய்ச் சென்றவர்**
**முத்தமிழ் உலகத்தின்**
**முதல்வராய்த் திரும்பியிருக்கிறார்!**

அரசுமுறைப் பயணத்தால்
ஆகாயம் கடந்தவர்
ஆகாயப் புகழை
அள்ளிக் கொண்டு
வந்திருக்கிறார்!

தெற்காசிய அரசியலின்
திசைகளைத் தீர்மானித்த
திராவிட இயக்கத்தின்
திருமுகமாய்ச் சென்ற
திராவிட மாடல் நாயகர்

தேசத்தின் பார்வையைத்
திருப்பித் தன்மீது
ஒருமுகமாய்க் குவித்து
ஒளிச்சேர்க்கை பெற்று
உற்சாகமாய் வந்திருக்கிறார்!

தாடிவைத்த பெரியாரின்
தன்மானக் கருத்துகளை
மூடிவைக்க முடியாது என்று
மூதறிஞர் உலகம்
முன்வைத்த முழக்கங்களை

இங்கிலாந்தில் கேட்டு
இதயம் பூரித்துப்
பொங்கிவரும் காவிரியின்
புனல்வேக எழுச்சியுடன்
இன்று திரும்பியுள்ளார்..
எங்கள் மகா தலைவர்!

கண்மூடிப் பழக்கங்கள்
மண்மூடிப் போக
முகமூடி மனிதர்களின்
முற்றுகை தகர்த்து
ஆதிக்கபுரிகளின்
ஆணிவேர் அறுத்து

சமத்துவச் சகாப்தத்தை
சமைத்துக் காட்டிய
‘பெரியாரின் பேரன்’ எனும்
பெருமிதச் சிகரத்தில்
ஏறி விளையாடி
இளங்கன்றாய் உரையாடி
எம் தலைவர் வந்துள்ளார்!

**‘பெரியாரின் நெறிவாழும்**
**பேரனே வருக!**
**பெருவெற்றி பெறப்போகும்**
**தீரனே வருக!’ என்று**
**அவரை**
**வரவேற்று மகிழ்கிறது**
**வரலாற்று வானம்!**

ஐம்பதுக்கும் மேற்பட்ட
நாடுகளைக் கொண்ட
ஐரோப்பாக் கண்டத்தில்



இரண்டு நூற்றாண்டுகளில்
ஏற்பட்ட புரட்சியை
இருபதே ஆண்டுகளில்..
இரத்தம் சிந்தாத
யுத்தம் நடத்தி
இங்கண் நிகழ்த்தியவர்
எந்தை பெரியார்!

அவரது திருவுருவப் படத்தை
உலகப் பேரறிவின்
உறைவிடத்தில் திறந்துவைத்து
ஓங்குபுகழ் மாடத்தின்
ஒளிவிளக்காய் ஆகிவிட்டார்
நம் உத்தமத் தலைவர்!

**‘வானமும் வையமும்**
**உள்ளவரை**
**மானமும் அறிவும்தான்**
**மனிதற்கு அழகு’ என்று**
**ஞான பாடம் போதித்தவரை,**
**ஞாலமே ஏத்தும்**
**ஞான பீடத்தில் நின்று**
**நாவாரப் போற்றி**
**உலகத் தமிழர்**
**உள்ளங்களில் எல்லாம்**
**நங்கூரமாய் இறங்கியிருக்கிறார்**
**நம்முடைய முதல்வர்!**

ஈரோட்டுப் பெரியார்
என்னும் திருநாமத்தின்
இயக்கவியல் ஆற்றலை
இங்கிலாந்தில் பதித்துவிட்டு

ஏறு நடையிட்டு
ஏராளக் கண்பட்டு
தாராள முதலீட்டு

ஒப்பந்தம் தாம்பெற்று
சீராளர் தளபதி
செம்மாந்து திரும்பியுள்ளார்!

கருத்தியல் தளங்களைக்
கலக மயமாக்கி
கட்சி மேடைகளைக்
கல்வி மயமாக்கி

ஒடுக்கப் பட்டவர்களை
உணர்வு மயமாக்கி
ஆணவக்காரர்களை
அச்ச மயமாக்கி
கூடிக் கலைந்த
கூட்டத்தை எல்லாம்
கொள்கை மயமாக்கிய
கோளரியாம் பெரியாரை..

‘உலக மயம்’ ஆக்கிய
உத்வேகத்தோடு
ஒருவாரா வரம்வாங்கி
உணர்ச்சிப் பிரவாகமாய்
வந்திருக்கிறார்,
கருணை மயமாகிக்
கடமையாற்றும்
நம் முதலமைச்சர்!



டாக்டர்
**எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.**
மேனாள் ஒன்றிய
இணையமைச்சர்

நம் திராவிட இயக்கம்
சுயமரியாதைச் சுடரில்
பூத்தது!
சாதிப் பாறையைத்
தகர்த்து முளைத்தது!

இந்தி எதிர்ப்புத் தீயில்
முகிழ்த்தது!

ஆரிய மாயையை
அடித்துத் துவைத்தது!

மடமையைக் கொளுத்திய
சாம்பலில் முளைத்தது!
மங்கையர் உரிமையைத்
தூக்கிப் பிடித்தது!

இன்றும்
இனமானம் காக்க
எரிமலையாய் வெடிப்பது!
வள்ளுவப் பறையை
ஓங்கி அடிப்பது!

சமத்துவ வானில்
என்றும் பறப்பது!
சாமான்ய மக்களின்
குரலாய் ஒலிப்பது!

**சுருக்கமாய்ச் சொன்னால்**
**இது**
**பெரியாரின் பூமி**
**பெரியாரின் பூமியென்று**
**சொல்லிக் கொண்டே**
**இருப்பது!**

இதைத்தான்
உலகச் செவிகளுக்கு
உரக்கச் சொல்லிவிட்டு
ஒப்பரிய முதல்வராய்
ஒளியுலா முடித்து
செப்பரிய மனிதராய்த்
திரும்பி இருக்கிறார்..நம்
செந்தமிழ் முதல்வர்!

தோட்டா தரணியின்
தூரிகை வரைந்த
உயிரோவியத்தைக்
கோட்டையில் வாழும் நம்
கோப்பெருஞ் சோழர்
திறந்து வைத்துவிட்டு..
தெளிதமிழ் ஊற்றாய்
தென்பொதிகைக் காற்றாய்
பெரியாரின் மாற்றாய்
தேன்புகழ் சுமந்து
திரும்பியிருக்கிறார்!

**‘பெரியாரின் நெறிவாழும்**
**பேரனே வருக!**
**பெருவெற்றி பெறப்போகும்**
**தீரனே வருக!’ என்று**
**அவரை**
**வரவேற்று மகிழ்கிறது**
**வரலாற்று வானம்!**

## மரக்காணத்தில் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டம்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

மரக்காணம் செப் 8–

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் மரக்காணம் பேரூராட்சியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட சுகாதார இணை இயக்குனர் பொறுப்பு டாக்டர் லதா தலைமை தாங்கினார். ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் முன்னிலை வகித்தார். பேரூராட்சி மன்றத் தலைவர் வேதநாயகி ஆள வந்தார் அனைவரையும் வரவேற்றார்

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு முகாமினை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து முகாமில் அமைக்கப்பட்டபல்வேறு கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

முகாமில் விழுப்புரம் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், விழுப்புரம் மாவட்ட சுகாதார அலுவலர் செந்தில் குமார், மெடிக்கல் மருத்துவ கண்காணிப்பாளர் பார்த்தசாரதி, வட்டார மருத்துவ அலுவலர் கார்த்திகேயன், துணைச் சேர்மன் பழனி, மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பலராமன், செயல் அலுவலர் ஜேம்ஸ் டி.சாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் சிலம்பு செல்வன், மாவட்ட கவுன்சிலர் புஷ்பவல்லி குப்புராஜ், ஒன்றிய கவுன்சிலர்கள்துர்கா கலைஞர், பெருமாள், சபரி முனுசாமி, ராஜதுரை, பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் தேசப்பன், கணபதி, வேலு, பிரபாகரன், நல்வழி, முத்துவேல், சத்தியவாணி கோபாலகண்ணன், அமானுல்லா, யாசின், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் தங்கராஜ், ஒன்றிய துணை செயலாளர் தயாளன், முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் வெற்றிவேல், மாவட்டப் பிரதிநிதி பாபு உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முகாமில் பொது மருத்துவம், இதயம், எலும்பு, நரம்பியல், தோல், மகப்பேறு, குழந்தைகள் நலன், நுரையீரல், அறுவை சிகிச்சை, கண் காது மூக்கு தொண்டை, மனநலம், பல், சித்தா, இயன்முறை சிகிச்சை, கதிர் இயக்க சிகிச்சை மற்றும் சர்க்கரை நோய் உள்ளிட்ட 17 வகை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது.

முகாமில் பங்கேற்றவர்களுக்கு ரத்தப் பரிசோதனை இ.சி.ஜி. உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டது.

மேலும் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு எக்கோ, கார்டியாகிராம், எக்ஸ்ரே அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் முதல்வரின் மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்கள் முகாமில் வழங்கப்பட்டது .

இந்த முகாமில் 2000 க்கும் மேற்பட்டவர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

மருத்துவ முகாமில் பயனடைந்தவர்கள் அனைத்து நோய்களுக்கும் ஒரே இடத்தில் தீர்வு காணப்படுவதால் வயதானவர்கள் எந்த ஒரு சிரமமும் இன்றி தங்களது உடல்நிலை ஒரே இடத்தில் பரிசோதனை செய்து அந்தந்த சிகிச்சைக்கு தேவையான மருந்து மாத்திரைகள் மருத்துவர்கள் கொடுத்து அனுப்புகின்றனர் இது போன்ற ஒரு உன்னதமான திட்டத்தை அறிவித்து செயல்படுத்துகின்ற தமிழ்நாடு முதலமைச்சருக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளனர்.

முன்னதாக நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாமில் மரக்காணம் பேரூராட்சி மன்ற கவுன்சிலர் பிரபாகரன்உள்ளிட்ட 40க்கும் மேற்பட்டோர் ரத்த தானம் வழங்கினர்.



திருவள்ளூர் மாவட்டம் திருவேற்காடு வேலப்பன்சாவடி பகுதியில் அப்போலோ பல் சிகிச்சை மருத்துவமனை திறப்பு விழா நடைபெற்றது . இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்து பார்வையிட்டார். இதில் திருவேற்காடு நகரக் கழக செயலாளர் என்.இ.கே.மூர்த்தி, ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், உளவியல் சிகிச்சை ஆலோசனை தலைமை அதிகாரி இமயவர்மன் மோகன், நிர்வாக இயக்குனர் டாக்டர் வி.தமிழ்ச்செல்வன், பொதுக்குழு உறுப்பினர் எம்.முத்தமிழ் செல்வன், எஸ்.சங்கர், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் க.பரிமளழகன், உள்பட கழக நிர்வாகிகள் மருத்துவர்கள் பலர் உள்ளனர்.

## தி.மு.க. இலக்கிய அணி ஆலோசனைக் கூட்டம்!

### மாநிலச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிக்கை!

சென்னை,செப். 8 -

தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில் அது குறித்து ஆலோசித்திடவும் கழக இலக்கிய அணியின் செயல்பாடுகள் குறித்து ஆலோசித்திடவும் ஆலோசனைக் கூட்டம் 13.9.2025 சனிக்கிழமை அன்று மாலை 3 மணிக்கு அன்பகத்தில் நடைபெறுகிறது.

இக் கூட்டத்தில் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

வரும் போது மினிட் புத்தகத்தை கட்டாயம் எடுத்து வர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வி.பி.கலைராஜன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.






தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட கிழக்கு தாம்பரத்தில் அமைந்துள்ள சீயோன் மற்றும் ஆல்வின் பள்ளி குழுமத்தின் சார்பில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் ஆசிரியர்களை பாராட்டி, கௌரவித்து, விருதுகளை வழங்கினர். இந்நிகழ்வில் காவல் துறை உதவி கண்காணிப்பாளர் ஷானாஸ் இலியாஸ். இ.கா.ப.சீயோன் மற்றும் ஆல்வின் பள்ளி குழுமத்தின் நிறுவனர் தலைவர் முனைவர். என்.விஜயன் காட்டாங்குளத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் ஜெ. உதயாகருணாகரன், திருவஞ்சேரி ஊராட்சி மன்ற தலைவர் ஜனனிசுரேஷ்பாபு, நெடுங்குன்றம் ஊராட்சி மன்ற தலைவர் வனிதாஸ்ரீ சீனிவாசன் மற்றும் ஆசிரியர்களும், மாணவ மாணவியர்களும் பெற்றோர்களும் கழக தோழர்களும் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.